# சர்வாதிகாரம் காட்டுத் தீ! ஜனநாயகம் வீட்டு விளக்கு!

**ஜோ**சப் விஜய் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற 60 நாட்களில், சமூக நீதி போற்றி வரும் தமிழ்நாட்டில் 9 ஆணவப் படுகொலைகள், 4 விசாரணைக் கைதிகள் காவல் நிலையச் சாவு, நடைபெற்றுள்ளதாகத் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணித் தலைவர் பி.சுகந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்குறிகள் நிரம்பிய த.வெ.க. கட்சித் தேர்தல் அறிக்கையில் "ஒவ்வொரு காவல் படுகொலையும் அரசின் தோல்வி என்று சொல்லி இருந்தது என்பது நினைவிருக்கலாம். ஆனால், அரசியலில் அரிச்சுவடி தெரியாத கோமாளி ஒருவரின் பல போலி வாக்குறுதிகளை நம்பி, மாரிசன் மான் கண்டு மாயையில் மயங்கிய சீதையைப் போல, மக்கள் வாக்களித்தனர். அதனால், தமிழ்நாடு செயின்ட் சார்ஜ் கோட்டையில் ஆட்சி நிர்வாகம் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருக்கிறது. இன்று ஜோசப் விஜய் தலைமையிலான காவல் துறை, விசாரணை என்ற பெயரால் அழைத்து வரப்பட்ட கைதிகள்; காவல் நிலையங்களில், சிறைகளில் காவலர்களின் காட்டுமிராண்டித்தனத் தாக்குதல்களால் உயிரிழந்துள்ளனர். ஒரே வாரத்தில் மூன்று காவல் மரணங்கள் நடந்திருக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டம் தென் தாமரைக் குளம் அருகே, ஈத்தங்காடு, நாராயணன் பகுதியைச் சேர்ந்தவர் சசிதரன். அவரது மகன் சபரி வர்மன் (34) எனும் மாற்றுத்திறனாளி ஈத்தங்காட்டில் மளிகைக் கடை நடத்தி வந்தார். கடந்த 9.7.26 அன்று, கடையில் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை விற்றதாகக் கூறித் தென் தாமரைக் குளம் உதவி ஆய்வாளர் உட்பட போலீசார் சிலர், சபரி வர்மனிடம் இலஞ்சம் ரூபாய் 25,000 கேட்டதுடன், பணம் தராமலே பத்து பாக்கெட் சிகரெட் வாங்கியும், அத்துடன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, மேல் அதிகாரியின் நிர்பந்தத்தின் பேரில் செல்பேசியை பிடுங்கி வைத்துக் கொண்டும் அவரை அடித்துத் துன்புறுத்திக் கைது செய்து இரவு 11 மணி அளவில் நாகர்கோவில் கிளைச் சிறையில் அடைத்துள்ளனர்.

அங்கும் சிறைக் காவலர்கள், தண்டனை கைதிகள் அவரை விலங்கிட்டுக் கட்டி வைத்துச் சித்திரவதை செய்து கடுமையாகத் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் சிறைக் காவலர்கள் சிறையில் இருந்த பயங்கர கொலை குற்றவாளிகள் உள்ளிட்ட பலரும் தாக்குதல் நடத்திய உள்ளதாக செய்திகள் வருகின்றன.

யாரையோ காப்பாற்ற வழக்கைத் திசை திருப்ப முயற்சி நடக்கிறது. உடற்கூராய்வு அறிக்கையில் அவரது உடல் பத்தொன்பது இடங்களில் காயங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காயங்களினால் அவர் மரணம் ஏற்படவில்லை என்று பொய்யான அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, கணினிப் பட்டதாரியான அவரது மனைவி ஆனந்தவல்லி உட்பட உறவினர்கள் மற்றும் வட்டார மக்கள் உடலை வாங்க மறுத்து தொடர் மறியல் போராட்டம் செய்து வருகின்றனர். சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற உறவினர்கள் கோரிக்கை வைத்துப் போராடி வருகிறார்கள்.

சிறைக்குள் இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகள் மற்றும் உடற்கூராய்வு மருத்துவப் பதிவுக் காட்சிகள் இவை அனைத்தும் ஏன் வழங்கப்படவில்லை என்று தி.மு.க. வலியுறுத்திக் கேள்விகள் பல எழுப்பியுள்ளது? மாவட்ட ஆட்சியர் இதில் நேரடியாகத் தலையிட வேண்டும்; மீண்டும் முறையாக உடற்கூராய்வு செய்யப்பட வேண்டும்; தென் தாமரைக் குளம் காவல் நிலையம் மற்றும் கன்னியாகுமரி கிளைச் சிறைக் குள்ளும் நடந்த தாக்குதல்கள், இக்கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட வேண்டும்; சி.பி.ஐ. விசாரணை வேண்டும்; என்று அவருடைய உறவினர்கள், பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக்
குழுத் தலைவர்



இந்நிலையில் சபரி வர்மனை அடித்துக் கொன்றதாக 3 போலீசார் மற்றும் 8 கைதிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. அதன்படி 103 (1) பி.என்.எஸ். (கொலை), 61 (2) பி.என்.எஸ். (குற்றச்சதி), 115 (2) மற்றும் 118 (1) பி.என்.எஸ். (காயம் மற்றும் கொடுங்காயத்தை ஏற்படுத்துதல்), 191 (2) பி.என்.எஸ். (கலகம் விளைவித்தல்), 296 பி.என்.எஸ். ஆபாசமான செயல்கள், 238 பி.என்.எஸ். சாட்சியங்களை மறைத்தல் (அல்லது) அழித்தல் ஆகிய ஏழு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தி.மு.க. ஆட்சியில் சிவகங்கை மாவட்டம், மடப்புரம் கோயில் காவலாளி அஜித் குமார் காவல் விசாரணையில் தாக்கப்பட்டு மரணம் அடைந்தார் எனத் துயரச் செய்தி கேட்டதும் முதல்வராக இருந்த மு.க. ஸ்டாலின், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு மன்னிப்பு கேட்டதுடன், ஆறுதல் கூறி அப்பகுதி அமைச்சர் பெரிய கருப்பனை நேரில் அனுப்பி சந்தித்து ஆறுதல் கூறிட வைத்தார்.

இதில் சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்; அது மட்டும் இல்லாமல் சி.பி.ஐ. விசாரணைக்கும் உத்தரவிட்டார் முதல்வராக இருந்த தளபதி ஸ்டாலின். அதற்கு மாறாக, நடிகர் ஜோசப் விஜய் சினிமா பாணி அரசியல் செய்தார். 2025 ஜூலை2 இல் பாதிக்கப்பட்ட அஜித்குமாரின் குடும்பத்தைத் சந்தித்து மடப்புரத்தில் அரசியல் செய்தார்.

அத்துடன் சென்னை சிவானந்த சாலையில் அவரது தலைமையில் ஊர்வலம் பேரணி எனக் கூட்டிச் "சட்ட ஒழுங்கு சரியில்லை என்றும், அப்படிச் சரி செய்ய வேண்டுமென்றால் மக்களுடன் சேர்ந்து அதனை சரி செய்வோம் என்றும் அன்று பேசியவர்தான் இன்றைய முதல்வர் ஜோசப் விஜய். ஆனால், இன்று கன்னியாகுமரி நாகர்கோவில் மாற்றுத் திறனாளி சபரி வர்மன் சாவு குறித்து எந்த விதத்திலும், வாய் திறக்காமல் ஜோசப் விஜய் இருந்து வருகிறார். பத்திரிகை போன்ற ஊடகங்களுக்கு எந்தப் பதிலும் அளிக்காமல் கல்லுளி மங்கனாக இருந்து வருகிறார். அதுபோல அவருடைய. அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைக் கண்டு ஆறுதல் இதுவரை கூறிட முன் வரவில்லை; ஏன்?

"கைது செய்யப்பட்டபோது ஆரோக்கியத்துடன் இருந்த சபரி வர்மன், சிறைக்குள்ளே பிணம் ஆகி வெளியில் வந்த போது, உடல்நலம் இல்லாமல் இறந்தார் என்று ஜோசப் விஜய் காவல்துறை சொல்லுவது உண்மைக்கு மாறானது. இப் படுகொலையைத் தகுந்த முறையில் விஜய் அரசு விசாரித்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் விட்டால்; சி.பி.ஐ.க்கு மாற்றக் கோரி தி.மு.க. சட்டப் போராட்டம் நடத்தும் என்று கடுமையான முறையில் தன் கண்டனத்தை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தி.மு.க. சார்பில் தெரிவித்துள்ளார்.

அதைப் போல தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் தி.மு.க. சட்டப் போராட்டம் நடத்தும் என்றும் கூறியுள்ளார்.

பொதுவாக ஒருவரைக் கைது செய்தல் தொடர்பான சட்டவகை முறைகளைப் பின்பற்றாததால் தான் இதுபோன்ற விளைவுகள் நடைபெறுகின்றன. **(consequences of non compliance with provisions relating to arrest).** சட்டத்திற்கு முரணான வகையில் கைது செய்தால் கைது செய்யப்பட்ட நபர் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (I.P.C) 96 முதல் 106 வரை உள்ள பிரிவுகளில் (புதிய பி.என்.எஸ். சட்டம் பிரிவு 35 முதல் 44 வரை) வாயிலாகக் கூறப்பட்டுள்ள தற்காப்பு உரிமைகளைப் பயன்படுத்தலாம்.

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கைது செய்தால், அவர் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 220 (பி.என்.எஸ். சட்டப் பிரிவு 258) இன் கீழ் வழக்குத் தொடர முடியும். மேலும், எவரேனும் ஒரு நபர் பிறிதொரு நபரை சட்டத்துக்கு முரணான வகையில் கைது செய்தால், அவர் மீது இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு ஐ.பி.சி. 342 (பி.என்.எஸ். சட்டப் பிரிவு மற்றும் 127 (2)) கீழ் முறையற்ற தடுப்பிற்காக வழக்குத் தொடர முடியும். இப்படி தனிநபருக்கு உள்ள பாதுகாப்பையும் சட்டப் பிரிவுகள் சொல்லுகின்றன. ஆனால், காவல்துறை ஆட்சியாளரின் ஏவல் துறையாகச் செயல்பட்டு வருகின்றது.

காவல்துறையால் கைது செய்யப்பட்ட நபரானவர் கொடூரமாக மனிதாபிமானமற்ற முறையில் அல்லது கேவலமான முறையில் நடத்தப்பட்டாலோ, விசாரணை எனும் புலன் விசாரணை நடக்கின்ற போது சித்திரவதை நடந்திருந்தாலோ அது அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்பு 21, 22 வழங்குகின்ற தனிநபர் சுதந்திர உரிமையை மீறுவதாகும். அவை மிகக் கடுமையாகக் காவல்துறையினரால் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பது குறித்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குல்தீப் சிங், ஏ.எஸ். ஆனந்த் ஆகியோர் வழங்கிய தீர்ப்பானது (18.12.1996) குற்றவியல் நடைமுறைச் சட்ட வரலாற்றில் ஒரு மைல் கல்லாக விளங்கி வருகிறது.

டி.கே. பாசு என்பவர் மேற்கு வங்கத்தில் அரசியல் சாராச் சட்ட உதவி சேவைகள் நடத்தி வந்தார். அவர் சட்ட விரோத காவல் வைப்பு, மரணம் குறித்து ஆங்கில இதழ்களான 'டெலிகிராப்' 'ஸ்டேட்ஸ்மேன்' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற ஏடுகளில் எழுதி வந்ததை; உச்ச நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்தது. இதனை ஒரு பொது நல வழக்குக்கான ஒரு நீதிப் பேராணை (Writ) மனுவாக உச்சநீதிமன்றம் கருதிப் பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்டு விசாரித்தது .

'கைது மற்றும் காவலில் வைக்கும் அனைத்து நேர்வுகளிலும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்நபருக்கு ஏற்படுத்தித்தரப்பட வேண்டும்' என்று 11 கட்டளைகளைப் பிறப்பித்து உச்ச நீதிமன்றம் டி. கே. பாசு எதிர் மேற்கு வங்கம் (Dilip K. Basu versus State of West Bengal) வழக்கில் கூறி உள்ளது.

'அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 21 ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள முக்கியமான உரிமையானது, தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, விசாரணைக் கைதிகளுக்கு, சிறையில் உள்ளவர்களுக்கு அல்லது பாதுகாப்பில் உள்ள மற்ற கைதிகளுக்கு, சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளின்படியல்லாமல், வேறு வகையில் மறுக்கப்படலாகாது' என்று அந்த வழக்கில் கூறப்பட்டது. எனவே, கீழ்க்கண்ட இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அவ் வழக்கில் ஆணித்தரமாகக் கூறியது.

(1) கைது செய்கின்ற விசாரணை காவல்துறை அதிகாரி தங்களது சரியான தெளிவான கண்களுக்கு தெரிகின்ற அடையாளத்தையும் தங்கள் பெயரையும் கொண்ட சீட்டு பதவியுடன் பொருத்திக் கொண்டிருக்க வேண்டும். (should bear accurate visible and clear identification and nametags with their designation) அல்லது விசாரணை கையாளும் அவருடைய முழு விவரம் பற்றிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) கைது செய்கின்ற அதிகாரி, கைது செய்யும் சமயத்தில் கைது குறிப்பு (Memo of arrest) ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். அதில் குறைந்தது ஒரு சாட்சியாவது கையெழுத்திட வேண்டும். அச்சாட்சியானவர் கைது செய்யப்பட்டவரின் குடும்ப உறுப்பினராக இருக்கலாம் அல்லது அந்த வட்டாரத்தில் வசிக்கின்ற மதிப்பிற்குரிய ஒரு நபராக இருக்கலாம் . கைது செய்த நேரமும் தேதியும் குறிக்கப்பட வேண்டும்.

(3) கைது குறிப்பில் கையெழுத்திடுகின்ற சாட்சியானவர், கைதானவரின் நண்பராகவோ, உறவினராகவோ இல்லையெனில், கைது செய்யப்பட்டு அல்லது சிறையில் விசாரணை மையம் அல்லது வேறு வகையான அடைப்புக்குள் வைக்கப்பட்டு இருக்கும் நபர், தான் கைது செய்யப்பட்டுக் குறிப்பிட்டதொரு இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் விவரத்தைக் கூடிய விரைவில் தனது உறவினர், நண்பர், அறிந்தவர் அல்லது தனது நலனில் அக்கறை கொண்ட ஒருவருக்குத் தெரிவிக்க உரிமையுடையவர் ஆவார்.

(4) கைது செய்யப்பட்டவரின் உறவினர் அல்லது நண்பர் வேறு மாவட்டத்தில் அல்லது நகர ஊர்களில் இருந்தால்; அங்குள்ள சட்ட உதவி மையத்தின் மூலமாகவும், அங்குள்ள காவல் நிலையத்திற்குத் தொலைவரிச் செய்தி கொடுப்பதன் மூலமாகவும், கைது செய்ததிலிருந்து 8 அல்லது 12 மணி நேரம் வாய்ப்பிற்குள் கைது செய்யப்பட்ட நேரம், இடம், காவலில் உள்ள வைக்கப்பட்டுள்ள இடம் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

(5) கைது செய்யும் ஒருவரைக் காவலில் வைக்கும் பொழுது, அது குறித்த தகவலைத் தான் விரும்பும் ஒருவருக்குத் தெரிவிக்க உரிமை உண்டு என்ற விவரத்தைக் கைது செய்யப்பட்டவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

(6) காவலில் வைக்கப்பட்டுள்ள இடத்தில் அங்குள்ள பதிவேட்டில், அவர் கைதான விவரமும், கைது குறித்து யாருக்குத் தெரிவிக்கப்பட்டது என்பதையும், கைது செய்யப்பட்டவர் எந்த அதிகாரியுடைய பொறுப்பில் இருக்கிறார் என்பதான விவரங்களையும் குறிக்கப்பட வேண்டும்.

(7) கைது செய்யப்படும் ஒருவர் தான் வேண்டிக் கொண்டால்; அவரைப் பரிசோதித்துக் கைது செய்யப்பட்ட சமயத்தில் அவர் உடம்பில் சிறிய காயங்களோ, பெரிய காயங்களோ இருந்தால், அவற்றைப்பற்றி அப்பொழுதே பதிவு செய்ய வேண்டும். சோதனை குறிப்பு (Inspection memo) கைது செய்யப்பட்டவர் மற்றும் கைது செய்த அதிகாரி இருவராலும் கையெழுத்திடப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவருக்கு அதன் நகல் வழங்கப்பட வேண்டும்.

(8) கைது செய்யப்பட்டவர் காவலில் உள்ள போது, 48 மணி நேரத்திற்கு ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும். மாநில சுகாதாரப் பணி இயக்குநர் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் குழுவை (Penel of approved doctors) வட்ட, மாவட்ட அளவில் நியமிக்க வேண்டும்.

(9) கைது குறிப்பு உட்பட மேலே குறிப்பிட்டு ஆவணங்களின் நகல்கள் அனைத்தையும் கோப்பிற்காக நிர்வாகத்துறை குற்றவியல் நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(10) கைது செய்யப்பட்டவரை காவல்துறை அதிகாரி கேள்விகள் கேட்டு விசாரிக்கின்ற போது, விசாரணையின் முழுவதும் இல்லாவிடினும் விசாரணையின்போது, வழக்கறிஞர் ஒருவரை சந்திக்க வாய்ப்பு தரப்பட வேண்டும்.

(11) எல்லா மாவட்ட மற்றும் மாநில தலைமை இடங்களில் காவல் துறை கட்டுப்பாட்டு அறை ஒன்று ஏற்படுத்த வேண்டும். ஒருவரைக் கைது செய்து காவலில் வைக்கின்ற போது; அவரைக் கைது செய்த அதிகாரி, கைது செய்த விவரம் மற்றும் காவலில் வைத்துள்ள இடம் குறித்துக் கைது செய்ததிலிருந்து 12 மணி நேரத்திற்குள் மேற்படி காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். அவ்விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். இந்த நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காத சம்பந்தப்பட்ட அதிகாரி மீது துறை சார்ந்த நடவடிக்கைக்கு உள்ளாவதோடு, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கும் உள்ளாவார் என அதிகார வரம்புள்ள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். இவ்வழக்கின் தீர்ப்புப் படியே குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பல்வேறு வகை முறைகள் இயற்றப்பட்டன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆனால், ஜோசப் விஜய் அரசு பொறுப்பு ஏற்றவுடன் தமிழ்நாடு காவல் துறையைச் சட்ட விதிமுறைகளை எல்லாம் மீறி நடந்து வருகிறது. யூடியூப் மதுரை மாரிதாஸ் கைது, சமூக வலைத்தள நபர்கள் மீது தவறான பிரிவுகளில் வழக்குப் பதிவு, இராயக்கோட்டை அன்பானந்தம் கைது, முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களான அனிதா ராதாகிருஷ்ணன், எ.வ. வேலு மீது வழக்குகள் பாய்ச்சல், புதிய தலைமுறை தொலைக்காட்சி ஊடகவியலாளர் விஜயன் சட்ட விரோத விசாரணை மிரட்டல், விளாத்திக்குளம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் கைது என தொடர்கின்றன. தன் அமைச்சர் பெருமக்கள், எம்.எல்.ஏ.க்கள், த.வெ.க. கட்சியினர் செய்து வரும் பாலியல், கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு எனச் சட்டவிரோதச் செயல்கள் மீது, தன் கட்சியினரே புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்பது Police State என நிரூப்பிக்கிறது.

ஆனால் எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கும் குதிரை பேரம் நடத்தி வரும் ஜோசப் விஜய் அரசு; அரசியல் சட்டத்திற்கு விரோதமாகச் செயல்பட்டு வருகிற அதிகாரிகள் எல்லோரும் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நின்று பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. காரணம் இது சட்டத்தின் ஆட்சி **(INDIA IS UNDER THE RULE OF LAW, BUT NOT RULER OF LAW PART 3 OF THE CONSTITUTION (EXAMPLE, ARTICLE 19 ON FREEDOM AND ARTICLE 21 ON THE RIGHT TO LIFE) RESTRICTS THE GOVT. ARBITRARILY INFRINGING ON CITIZENS LIBERTIES. RULE OF LAW IS SUPREME.)**

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ள நிலையில் காவலர்கள் நியமனத்தை ஓராண்டுக்குத் தள்ளி வைத்துள்ளது த.வெ.க. அரசு. "இதனால் காவல் துறை பணிக்காகக் காத்திருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆம்; இப்படியான தான்தோன்றித்தனமான தற்குறி ஆட்சிகள் பற்றி தான் அண்ணா அப்போதே சொன்னார்.... "சர்வாதிகாரம் காட்டுத் தீ! ஜனநாயகம் வீட்டு விளக்கு! என்று.

## மேட்டூர் அணை திறக்காததால்
# வறண்டு போன வயல்கள்; கேள்விக்குறியான சம்பா சாகுபடி!

## டெல்டா விவசாயிகள் கவலை!

நாகப்பட்டினம், ஜூலை 21-

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் பாளம், பாளமாக வெடித்து வயல்கள் வறண்டு சம்பா சாகுபடி கேள்விக்குறியானது. இதனால் டெல்டா விவசாயிகள் கவலையுடன் உள்ளனர். காவிரி டெல்டா மாவட்ட பாசனத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். ஆனால் நடப்பு ஆண்டு தமிழக அரசின் அலட்சியமான போக்கால் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் படவில்லை.

இதனால் காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் குறுவை சாகுபடி பொய்த்து போனது. அதிலும் காவிரி நீரை மட்டுமே நம்பியுள்ள கடைமடை பகுதிகளில் குறுவை சாகுபடி முற்றிலும் கேள்விக்குறியாகியுள்ளது.

காவிரி டெல்டாவில் காவிரி நீரை மட்டும் நம்பி காத்திருந்த விவசாயிகளும், விவசாய கூலி தொழிலாளர்களும் வேலையில்லாமல், தங்களது குடும்பத்தை நடத்த முடியாமல் கடும் வேதனையில் உள்ளனர்.

அதேபோல் வழக்கமாக 5 லட்சம் ஏக்கரில் நடைபெறும் குறுவை சாகுபடி தமிழக அரசின் அலட்சியமான போக்கால் இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கோடை மழையும் போதுமானதாக பெய்யாமல் போனதால் நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், கீழ்வேளூர், திருப்பூண்டி, திருக்குவளை, வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் வயல்கள் பாளம், பாளமாக வெடித்து வறண்டு போய் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையை நம்பித் தான் பணிகளை தொடங்குவோம். அதன்படி நடப்பு ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் வந்து விடும் என்ற நம்பிக்கையில் நிலத்தை தயார் செய்தோம். ஆனால் தண்ணீர் வரவில்லை. இருப்பினும் இயற்கை கை கொடுக்கும் என உழவு பணிகளை தொடங்கினோம். இயற்கையும் சதி செய்து விட்டது. இதனால் எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு வயல்கள் வறண்டு பாளம் பாளமாக வெடித்து போய் உள்ளது.

இதனால் சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாக போய் விடும் என அச்சத்தில் இருக்கிறோஃததால் கருகி வருகிறது. குறுவை பாதிப்பு ஏற்பட்டு குடும்பத்தை நடத்த கஷ்டப்படும் நாங்கள் சம்பா சாகுபடியை தொடங்கி அதிலும் பாதிப்பு ஏற்பட்டால் எப்படி சமாளிக்க முடியும். மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப் படாத ஒவ்வொரு நாளும் நிலைமை மேலும் மோசமடைந்து வருகிறது.

கர்நாடகாவில் இருந்து உரிய காவிரி நீரை தமிழகத்திற்கு பெற்று தருவதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் தமிழக அரசு தீவிரம் காட்ட வேண்டும். எனவே தமிழக அரசு டெல்டாவை வறட்சி பாதித்த மாவட்டமாக உடனே அறிவிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கும் தேசிய பேரிடர் நிதியில் இருந்து நிவாரணம் வழங்க வேண்டும். குறுவை சிறப்பு தொகுப்பை தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக் கும் சம்பா தொகுப்பாக மாற்றி எந்தவித பாகுபாடுமின்றி வழங்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

## பழநி கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி நில மோசடி விவகாரம்:
# விழுப்புரம் அரசுப் பள்ளி ஆசிரியர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் அதிரடி சோதனை!
## முக்கிய ஆவணங்கள் சிக்கின; வீட்டுக்கு சீல் வைப்பு!

விழுப்புரம், ஜூலை 21 –

பழநி கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி நில மோசடி தொடர்பாக விழுப்புரம் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் பல மணி நேரம் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர். இதனை தொடர்ந்து அவரது வீட்டிற்கு சீல் வைக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டபாணி சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம், நீதிமன்ற உத்தரவுகளை மீறி போலி ஆவணங்கள் மூலம் வெறும் 2 கோடி ரூபாய்க்கு பதிவு செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக, பழநி கோயில் நிலங்கள் பிரிவு கண்காணிப்பாளர் முருகானந்தம் அளித்த புகாரின் பேரில், சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உள்ளிட்ட 4 பேர் மீது கூட்டுச்சதி, மோசடி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் சொத்து மற்றும் அரசு அதிகாரிகள் தொடர்புடைய விவகாரம் என்பதால், இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி தமிழக காவல்துறை தலைமையகம் உத்தரவிட்டது. இதையடுத்து, டிஎஸ்பி அஜய்தங்கம் தலைமையிலான சி.பி.சி.ஐ.டி. குழுவினர் பழநியில் கள ஆய்வு மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, பழநி அறநிலையத் துறையைச் சேர்ந்த முருகானந்தம், செயல் அலுவலர் கணபதி, ஆய்வாளர் சிவனேசன் உள்ளிட்ட அதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சஜிதா நேரில் விசாரணை நடத்தினார். இதனிடையே நிலமோசடி தொடர்பாக யார் விற்பனையில் ஈடுபட்டது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தினர். அதில் விழுப்புரம் என்.ஜி.ஜி.ஓ. காலனி காமராஜர் நகர் பகுதியில் வசிக்கும் முருகதாஸ் என்பவர் திருவெண்ணைநல்லூர் அரசு நிதி உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

பழநி கோயில் நில மோசடி தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டிற்கு சென்றனர். அப்போது வீட்டின் முன்பக்க கதவு பூட்டப்பட்டி ருந்ததால், பூட்டை உடைத்து போலீசார் விடிய விடிய சோதனையில் ஈடுபட்டனர். பல மணி நேர சோதனைக்கு பிறகு அவரது வீட்டில் இருந்து முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதனை தொடர்ந்து அவரது வீட்டிற்கு நேற்று காலை சி.பி.சி.ஐ.டி. போலீசார் சீல் வைத்தனர்.

பின்னர் வீட்டில் ஆள் இல்லாத நிலையில் முருகதாசுக்கு சம்மன் அனுப்பி காவல் நிலையத்தில் நேரில் அழைத்து விசாரணை நடத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர். பழனி கோயில் நில மோசடி தொடர்பாக விழுப்புரம் ஆசிரியர் வீட்டில் சோதனை நடத்தி, வீட்டுக்கு சீல் வைக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நெல்லையில் 2வது நாளாக விசாரணை: பழநி முருகன் கோயிலுக்கு சொந்தமான நிலம் மோசடி விற்பனையில் நெல்லையைச் சேர்ந்த சிலருக்கு தொடர்பு இருப்பது உறுதியானது.

இதையடுத்து பாளையங்கோட்டை வி.எம். சத்திரத்தைச் சேர்ந்த குமரகுருபரன் (46), நெல்லை டவுன் சாலியர் தெருவைச் சேர்ந்த டெக்கரேஷன் தொழில் செய்து வரும் சண்முகசுந்தரம் (43) மற்றும் நெல்லை டவுன் சம்பந்தர் தெருவைச் சேர்ந்த சிவகுமார் (41) ஆகியோரது வீடுகளில் அதிரடி சோதனை நடத்திய சிபிசிஐடி போலீசார் மூன்று குழுக்களாக பிரிந்து அவர்களிடம் நேற்று முன்தினம் தீவிர விசாரணை நடத்தினர்.

அப்போது சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இந்த விசாரணை முழுவதும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து சம்பந் தப்பட்ட மூன்று பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் அசையும், அசையா சொத்துக்கள் குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேற்று 2வது நாளாக தீவிர விசாரணை நடத்தினர். மேலும் அவர்களுடைய வங்கி கையிருப்பு, லாக்கர்களை திறந்து சோதனை நடத்த வுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

**★ சமூக வலைதளங்களில் உலா வரும் பத்திர ஆவணம்**

பழநி தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளை சார்பில் ரூ.2 கோடிக்கு 1.40 ஏக்கர் நிலத்தை சேதுபதி மற்றும் வெள்ளத்துரை ஆகியோருக்கு பதிவு செய்து கொடுத்த பத்திரம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த பத்திரம் ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த முத்திரைத்தாள் விற்பனையாளர் ராஜேஸ்வரி என்பவரிடமிருந்து கடந்த மார்ச் 27ம் தேதி வாங்கப்பட்டுள்ளது. பாப்பன்குளத்தைச் சேர்ந்த வெள்ளத்துரை வாங்கி உள்ளார். 72 தாள்களை கொண்ட பத்திரமாக தயாரிக் கப்பட்டுள்ளது. ஆனால், முதல் 5 பக்கங்கள் மட்டுமே சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

பொதுவாக, பத்திரப்பதிவிற்கான அரசு கட்டணம் அதன் அரசு மதிப்பீட்டில் 11 சதவீதம் ஆகும். சம்பந்தப்பட்ட இடம் பழநி நகர எல்லைக்குள் உள்ளது. தற்போது அரசு மதிப்பீடு இப்பகுதியில் சதுர அடிக்கு சுமார் ரூ.1,750 ஆக உள்ளது. இதன்படி 1.40 ஏக்கருக்கு சுமார் ரூ.11 கோடிக்கு மேல் அரசு மதிப்பீடு இருக்கும். ஆனால், இடத்தை விவசாய நிலமாக குறிப்பிட்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் பத்திரப்பதிவு செய்துள்ளனர்.


இதன்மூலம் நிலத்தை பத்திரப்பதிவு செய்ய மதிப்பீடு செய்ததிலும் முறைகேடு நடந்துள்ளது தெரியவந்துள்ளது. பத்திரம் கிரையம் செய்ய வழங்கப்பட்ட காசோலைகள் செல்லுபடியாகவில்லை. அதிகாரிகள் இவ் விஷயங்களில் எந்த கவனமும் கொள்ளவில்லை. இதன்மூலம் பத்திரப்பதிவு விவகாரத்தில் அதிகாரிகள் உடந்தை என்பது உறுதியாகிறது. சி.பி.சி.ஐ.டி. போலீசார் சார்பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளரை காவலில் எடுத்து விசாரித்தால் மட்டுமே முறைகேடு பத்திரப்பதிவிற்கு காரணமான வி.வி.ஐ.பி.க்களின் அடையாளம் தெரியுமென பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

**★ நிலத்தின் ஆவணங்கள் சேகரிப்பு**

ரூ.100 கோடி நில முறைகேடு தொடர்பாக, 4வது நாளான நேற்று சி.பி.சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் சந்தான லட்சுமி தலைமையில் 5க்கும் மேற்பட்ட போலீசார் பழநி தாலுகா அலுவலகத்தில் விசாரணை மேற்கொண்டனர். வருவாய்த்துறை மற்றும் சர்வேயர் பிரிவு அதிகாரிகளிடம் பிரச்னைக்குரிய இடத்தின் அரசு வரைபடம் உள்ளிட்ட ஆவணங்களை சேகரித்தனர். தொடர்ந்து இடத்தின் மீதான வரி வசூலிப்புகள், ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய யாரும் விண்ண ப்பத்திருந்தனரா, இடத்தின் ஆவணங்களை வேறு யாரும் பெற்றுச் சென்றனரா என்பது குறித்தும் விசாரித்தனர். சுமார் 2 மணி நேர விசாரணைக்கு ப்பின், சில ஆவணங்களுடன் அவர்கள் திரும்பிச் சென்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ர. லோகநாதன்
ஜூலை 21 (2022)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதி பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.